**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.38/2024**

**வாக்குமூலம்: வா.சா.ஆ.2 – வசந்தி**

**09.07.2026 : சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. இந்த வழக்கின் வாதி எனது தாயார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக ஏதாவது பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பத்திரத்தில் தடம் பற்றி ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அது ஓடை ஆகும். ஓடையில் நடந்து செல்லும் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஓடையில் நடந்து செல்ல முடியாது. எனது தாயார் தான் ஓடையை அழித்து கற்கள் போட்டுள்ளார் என்றால் இல்லை. பிரதிவாதி தான் ஓடையை அழித்துள்ளார். பிரதிவாதி தான் ஓடையை அழித்தார் என்று காவல் நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் புகார் அளித்தோம். அதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்பதால் தான் அதற்கு ஆதரவாக ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. எனது தாயார் நிலத்திற்கு மேல்புறத்தில் தான் ஒடை உள்ளது என்றால் சரிதான். தாராபுரம் ரோட்டிலிருந்து நரிக்கல்பட்டி ஆறு வரை ஓடை செல்கிறது. மேற்படி ஒடையில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது என்றால் உள்ளது. பிரதிவாதி எந்த ஒடையையும் அழிக்கவில்லை என்றாலும், எனது தாயார் தான் கரையை உடைத்து பிரதிவாதியின் நிலத்தில் மண் அரிப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் எங்களை அடிக்க வந்தார். மேற்படி பிரதிவாதி எங்களை அடிக்க வந்தார் என்ற விபரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.09 19:25:50 +0530

District Munsif,
Palani.